சர்வதசே அன்னையர் பிரார்த்தனை கூழு

கொள்கைகள்

ஒவ்வொரு குழுவும் Moms in Prayer International இயக்கத்தின் கொள்கைகளைப் பின்பற்றுவது கட்டாயம்; இது தவிர்க்க முடியாதது.

1. யாரேனும் தனிநபர் அல்லது குழு, Moms in Prayer இயக்கத்தின் நம்பிக்கையின் அறிக்கையையோ அல்லது கொள்கையையோ பின்பற்றாவிட்டால், அவர்கள் அந்த இயக்கத்தின் பெயரையும் சின்னத்தையும் பயன்படுத்த முடியாது. எந்த வடிவிலும் Moms in Prayer-ஐ பிரதிநிதித்துவப்படுத்த முடியாது.

2. Moms in Prayer International என்பது எந்தவொரு சமூக அல்லது அரசியல் காரணங்களுக்காக அழுத்தம் கொடுக்கும் குழு (Lobbying group) அல்ல; அந்த நோக்கம் எவ்வளவு மதிப்புமிக்கதாக இருந்தாலும் இது பொருந்தும். வெளிப்புற அரசியல் மற்றும் சமூகப் பிரச்சினைகளில் பங்கேற்பது என்பது முற்றிலும் தனிப்பட்ட விருப்பத்தின் அடிப்படையிலேயே இருக்க வேண்டும். எந்தச் சூழ்நிலையிலும், அத்தகைய வெளிப்புறப் பிரச்சினைகளுடன் Moms in Prayer என்ற பெயரை இணைத்துப் பயன்படுத்தக்கூடாது.

3. ரகசியத்தை பாதுகாப்பது, இந்த சேவையின் நேர்மையை உறுதிசெய்கிறது. எனவே, ஜெப வேண்டுதல்கள் மிகவும் ரகசியமாக வைத்திருக்கப்பட வேண்டும்.

4. Moms in Prayer International குழுக்கள் தங்கள் கூட்டங்களை பொதுப் பள்ளி வளாகங்களில் நடத்தக்கூடாது. பள்ளிகளுக்காக நாங்கள் ஜெபம் செய்கிறோம், பள்ளிகளில் அல்ல.

5. Moms in Prayer குழுக்கள், ஜெப வேண்டுதல்களை கேட்கும் முயற்சி செய்யக்கூடாது அல்லது பள்ளிகளில் 'ஜெப பெட்டிகள்' வைக்கக் கூடாது.

6. Moms in Prayer குழுக்கள், பள்ளிகளில் உறுப்பினர்களைச் சேர்க்க முயற்சி செய்யக் கூடாது.

7. Moms in Prayer International Group என்பது இந்த இயக்கத்தின் வர்த்தக முத்திரையாகும். அனுமதியில்லாமல் பெயரையும், சின்னத்தையும் உபயோகிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது. இதை பயன்படுத்த தலைமை அலுவலகத்தின் எழுத்துப்பூர்வமான ஒப்புதல் தேவை

8. Moms in Prayer உறுப்பினர் பட்டியல்கள்—இந்த இயக்கத்தின் உள்ளக பயன்பாட்டுக்காக மட்டுமே.
அவற்றை வேறு நபருடன், நிறுவனம், குழு அல்லது வெளிப்புற அமைப்புடன் பகிரக் கூடாது.

9. எந்த விதமான விளம்பரமும் கையேடுகளிலோ அல்லது அச்சிடப்பட்ட புத்தகங்களில் இருக்க கூடாது

10. ஒரே மனதுடன் உரையாடல் வடிவில் ஜெபிப்பதற்கும், ஜெபத்தின் நான்கு படிகளைச் செயல்படுத்துவதற்கும் ஏதுவாக, Moms in Prayer ஜெப நேரத்தில், பல்வேறு திருச்சபைகளில் கடைப்பிடிக்கப்படும் அந்நிய பாஷை பேசுதல் போன்ற ஆன்மீக முறைகளைத் தவிர்க்கிறோம். இது எவரையும் குறை கூறுவதற்காக அல்ல, மாறாக மற்றவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் விதமாகவே செய்யப்படுகிறது. ஒவ்வொரு பெண்ணும் இந்த ஜெபத்தில் தடையின்றி பங்கேற்பதை சாத்தியமாக்க, பன்முகத்தன்மையில் ஒற்றுமையை நாங்கள் மதிக்கிறோம்.

11. Moms in Prayer குழுக்கள், புறங்கூறுதலிலோ, குற்றம் சாட்டும் உரையாடல்களிலோ ஈடுபடக்கூடாது தெய்வீகமான, இருக்கமான, கருணையுள்ள சுத்தமான ஆவியுடன் பேச வேண்டும்

12. வேதாகமத்தின்படி திருமணம் என்பது ஒரு புருஷனுக்கும் ஒரு ஸ்திரீக்கும் இடையிலான உடன்படிக்கை உறவு என்று Moms in Prayer விசுவாசிக்கிறது.

13. Moms in Prayer குழுக்கள், மகளிருக்கே என்று உருவாக்கப்பட்டவை.